**Sub Court, Eraniel**

**OS.No.17/2022**

Date: 27.02.2026

PW2 - திருமதி.ஜெயந்தி

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதி எனது கணவர். இந்த வழக்கு எனது மாமாவின் (கணவரின் தகப்பனார்) சொத்தை பாகம் பிரித்து கேட்கிறேன். எனது மாமாவுக்கு எந்த சேமிப்பும் கிடையாது என்றாலும், எனது மாமியார் உழைத்து சம்பாதித்த பணத்தில் வழக்கு பட்டிகை சொத்து வாங்கப்பட்டது என்றால், சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தை வாங்குவதற்கு எனது மாமியாரின் தகப்பானார் பூதத்தான் குட்டி திப்பிறமலையில் உள்ள 50 செனட் சொத்தினை விற்று அந்த பணத்தை கொண்டு வழக்கு பட்டிகை சொத்து வாங்கப்பட்டது என்றால், சரியல்ல. எனது மாமியார் மரம் அறுக்கும் Saw Mill வைத்திருந்தார் என்றால், சரிதான். எனது மாமியார் மசாலா அரைக்கும் மில் (Flour Mill) வைத்திருந்தார் என்றால், சரிதான். அது எல்லாம் என் மாமா வைத்திருந்தார். நிலம் மட்டும் என் மாமியார் உடையது. விவசாய நிலத்தின் மூலமாகவும் அவருக்கு வருமானம் வந்தது என்றால், சரிதான். வா.சா.ஆ.2 முதல் 5 செட்டில்மென்ட் ஆவணங்களை எனது மாமியார் 2 ம் பிரதிவாதியின் பெயரில் 2005 மற்றும் 2007 ல் எழுதிக் கொடுத்திருக்கிறார் என்றால், சரிதான். இந்த ஆவணங்கள் எழுதப்பட்ட போதே எனக்கு தெரியும் என்றால், சரியல்ல. 2015 ல் தான் தெரியும். ஏற்கனவே நான் தெரிந்து கொண்டே அவ்வாறு தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. 2015 ல் எனது கொழுந்தனாரின் இறப்புக்கு நான் வந்திருந்த போது சொந்தபந்தங்கள் சொன்னபோது எனக்கு அந்த விபரங்கள் தெரிய வந்தன. 2005 மற்றும் 2007 ல் எழுதப்பட்ட ஆவணங்கள் எங்களது சொந்தபந்தங்களுக்கே தெரிந்திருந்த நிலையில், எனக்கு தெரியாது என்று குறிப்பிடுவது உண்மையில்லை என்றால், சரியல்ல. கிருஷ்ணகுமாருக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மென்ட் ஆவணம் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.4 பற்றியும் எனக்கு தெரியும் என்றால், சரியல்ல. கிருஷ்ணகுமாருக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மென்ட் ஆவணத்தை வா.சா.ஆ.6 ன் மூலமாக செட்டில்மென்ட் ரத்து ஆவணம் எழுதப்பட்டது பற்றியும் எனக்குத் தெரியும் என்றால், சரியல்ல. எனவே தற்போது மேற்படி செட்டில்மென்ட் ஆவணங்களை ரத்து செய்ய வேண்டும் என்று கோரி இருப்பது காலவரையறை சட்டத்திற்கு புறம்பானது என்றால், சரியல்ல. நானும் எனது கணவரும்

காதல் திருமணம் செய்து கொண்டோம் என்றால், சரிதான். நான் கிறிஸ்தவர் எனது கணவர் இந்து என்றால், சரிதான். திருமணத்திற்கு பின்பு வாதியான என் கணவர் கிறிஸ்தவர் ஆகிவிட்டார் என்றால், உடல் நிலை சரியில்லாததால் Prayer க்கு அழைத்து சென்றேன். என் கணவர் கிறிஸ்தவராக மாறிவிட்டார் என்றால், சரியல்ல. எங்களுக்கு 2 பிள்ளைகள் உண்டு. 2 பிள்ளைகளும் கிறிஸ்தவர்கள் என்றால், சாட்சி பதில் ஏதும் கூறவில்லை. நான் மண்டைக்காடு பஞ்சாயத்தில் வார்டு கவுன்சிலராக பணியில் இருக்கிறேன். எனது கணவரின் community certificate ஐ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். எனது பிள்ளைகளின் community certificate ஐ நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியாது. அவ்வாறு தாக்கல் செய்ய முடியாது என்று சொல்வதற்கு பிரத்தியேகமான காரணங்கள் சொல்ல முடியாது என் பிள்ளைகளின் Community certificate ஐ நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால், அவர்களும் கிறிஸ்தவர்கள் என்பது தெரிந்து விடும் என்றால், அதனால் தான் அவற்றை தாக்கல் செய்ய முடியாது என்று கூறுகிறேன் என்றால், சரிதான். நான் RC கிறிஸ்தவர், பிலாவிளை, புனித ஜார்ஜியார் ஆலயத்தில் நான் உறுப்பினர் என்றால், சரிதான். எனது பிள்ளைகளும் அந்த ஆலயத்தில் உறுப்பினர்கள் என்றால், சரியல்ல. வாதியான எனது கணவர் இந்த வழக்கை தான் கிறிஸ்தவர் என்று சொல்லி தான் தாக்கல் செய்திருக்கிறார் என்றால், சரிதான். இந்துவான எனது கணவர் கிறிஸ்துவராக மதம் மாறிவிட்டதால், இந்து வாரீசு உரிமை சட்டத்தின்படி அவர் வழக்கு பட்டிகை சொத்துக்களில் உரிமை கோர முடியாது என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.